# அவிட்டம் நக்ஷத்ரம் (ஆத்ம லிங்கம்)



**1. கணபதி வழிபாடு**

பரசிவம், சின்மயம், பூரணம்,

சிவபோகபாக்யம் பரமநிதியம்

**2. திருவருட்பாவில் சிவ அவிட்டம் சக்தி**

பரசுகாரம்பம், பரம், பிரம்ம வித்தம்

பரானந்தபுரண போகம்

**3. திருப்பாவைபாசுரம் – 15 அவிட்டம் இயல்பு**

எல்லே இளங்கிளியே இன்னம் உறங்குதியோ

சில்லென் றழையேன்மின் நங்கைமீர் போதர்கின்றேன்

வல்லைஉன் கட்டுரைகள் பண்டேன் உன் வாயறிதும்

வல்லீர்கள் நீங்களே நானேதா னாயிடுக

ஒல்லைநீ போதாய் உனக்கென்ன வேறுடையை

எல்லாரும் போந்தாரோ? போந்தார்போந் தெண்ணிக்கொள்

வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க

வல்லானை மாயனைப் பாடேலோ ரெம்பாவாய்

**Video Link : https://youtu.be/lMeMLglNkPs**

**விளக்கம் :**

உலகத்திலேயே பயங்கரமான ஆயுதம் எது? என்று கேட்டால் அதன் விடை நயவஞ்சகரின் நாக்காகும். இங்கு நாக்கு வார்த்தைகளால் வம்பு வளர்க்கும். அன்பும் செய்யும். எனவே இதை மையமாக வைத்து வாழ்க்கையை சிறப்பிப்பவர் வழக்கறிஞர், ஆசிரியர், வியாபாரி பரம வித்தையை சிறப்பாக செயலாக்குபவர்களே, அவிட்டம் நக்ஷத்ரகாரர்கள். இதையே பாசுரம் வில்லை உன் கட்டுரைகள் ! பண்டே உன் வாயறிதும்

வல்லீர்கள் நீங்களே நானேதான் ஆயிடுக. போட்டி என்று வந்தால் வெற்றி காணாமல் விட மாட்டார்கள். தொட்ட காரியம் துலங்கும். தெவிட்டாத தெள்ளமுதமும், நண்பர்கள் கூட்டத்தில் நயமான நாயக பாவம் மற்றும் பலப்பல திறமைகளுக்கு காரணம் எட்டு திசையிலிருந்தும் அஷ்டதிக் பாலகர்கள் அறிவை அபரிமிதமாக அளித்துக் கொண்டிருப்பர். வாழ்வின் சுவையை பரானந்த புரணபோகம் கொண்டிருப்பர். வாழ்வின் சுவையை பரானந்த புரணபோகம் என்ற வகையில் சிங்காரமாகவும், சொகுசாகவும், சிறப்பாகவும், சீராகவும் அனுபவிக்க ஆசி பெற்றவர்கள் அவிட்ட நக்ஷத்ரகாரர்களே. வல்லவர்களை கூட அழிக்கும் வல்லவனாக திகழ்பவர்களே வல்லானை கொன்றானை, மற்றாரை மாற்றழிக்க வல்லானை மாயனைப் பாடேலோர் எம்பாவாய் எனவே பரம் பிரம்ம வித்தம், பொருந்தியது.

எல்லே இளங்கிளியே எட்டும் உனக்கு சொந்தமே. அவிட்டமே உனக்கு எட்டு திசைகளிலிருந்து ஆனந்தங்கள், அருளாசிகள் கரைபுரண்டு வருவதை உணர்வாயாக, நீ மயக்கு மொழி பேச்சுக்காரி, பசப்பு வார்த்தை கெட்டிக்காரி, போட்டி என்று வந்தால் ஜெயித்திடும் ஜாலக்காரி. எல்லோரின் சொற்படி நானே வாயாடியாக இருந்துவிட்டு போகிறேன். கோபக்காரியாக இருந்தாலும் நான் பாசக்காரி. எனவே பரம்பிரம்ம வித்தைக்காரி என்ற வகையிலே ஆனந்தம் உங்களை அடைய வேண்டும் என்ற எண்ணத்தில் எல்லோரும் வந்தீர்களா என்பதில் குறிப்பாக இருக்கின்றாய்.

வல்லானை, கொன்றானை மாற்றாரை, மாற்றிழிக்க புரண போகம் நிறைந்த பரானந்த சிங்காரி, அவிட்டமேயாகும். தன்னலம் பேணும் பெண்டிராக, தன்னலத்தை சமுதாய நலமாக கருதும், ஆண்டாளாக வல்லானை மாயனைபாடும் பாவையாக ஆனந்த அதிர்வுகளை எட்டுத் திக்குக்கும் பரப்பும் இளங்கிளியாக அவிட்டம் வாழும் வளரும்.

ஆதலால் சில்லென்று அழையேன்மின் நங்கைமீர்! அதாவது அவிட்டம் தோல்விகளை தாங்க மாட்டார்கள். சிடுசிடுவென அவிட்டத்தை அழைக்காதீர்கள். அவிட்டத்திற்கு எட்டு ஆத்ம ப்ரதக்ஷணம் அனுதினமும் சாலச் சிறந்தது.

மாயனைப் பாடிப்பாடி வெற்றி கொள்ளும் இயல்பை எட்டுத்திக்கும் பரப்ப வந்தவர்களே அவிட்டம். அவிட்டமே வருக! அவிட்டமே அருள்க!

## 4. வேதத்தில் அவிட்டம் ஜோதிசக்தி

ஓம் பூர் புவ ஸ்வஹ **(மெட்டு)**

அக்ர நாதாய வித்மஹே
வசூபரி தாய தீமஹி
அஷ்டௌ தேவாய தீமஹி
சரவிஹடாய ப்ரசோதயாத்

வித்தைகள் பலப்பல நீ அறிவாய்
விதைகள் கலகல நீ சொல்வாய்
விதைகள் திசைகள் எட்டாகும்
சதைகள் உன்னில் பற்றாகும்

போட்டிகள் பேட்டிகள் ஜெயமாகும்
போகமும் தாபமும் இயல்பாகும்
ஆத்ம கோவிலும் உனதாகும்
சுற்றும் சுயமே நமோ நமோ

ஓம் சிவாய மே நம சிவாய மே
த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்

## 5. அவிட்டம் கவிதை

அனுபவம் புதுமை அவிட்டத்தில் காண்போம்
ஆரம்பம் இனிமை அதனினும் சேர்வோம்
ஆனந்தம் இகபரம் புணர்ச்சியை சுகிப்போம்
ஆடம்பரம் உபப்ரியம் ஆதலால் ப்ரம்மமாவோம்

கோபம் பாதி தாபம் பாதி சேர்ந்த அபூர்வ கலவையே
தானம் பாதி நிதானம் பாதி அளித்த – ஆடல் மேடையே
கையில் ரேகை காலில் ரேகை அறிவிக்கும் சீர்ஹோரையே
கடவுள் பாதி மனிதன் பாதியென பகுத்தறியும் சீர்சோலையே

நீ இருந்தால் எட்டு திக்கிலிருந்து ஆற்றல்வரும்
நீ பார்த்தால் எட்டா உயரத்திலும் ஜோதிதெரியும்
நீ தோற்றால் பட்டுப்பலகையிலும் ஒட்டுவிழும்
நீ எதிர்த்தால் சங்கபலகையிலும் களைகட்டும்

அன்புக்கோர் அணிசெய்து வாழ்வளிப்பாய்
வம்புக்கோர் விடையளித்து விடுவிப்பாய்
தெம்புக்கோர் அன்புருவாய் தெளிவிப்பாய்
என்புக்கோர் இரும்புருவாய் மகிழ்விப்பாய்

விட்ட மதில் மக்களாட்சி ஆதரவு பெருகும்
கட்ட மதில் போட்டியெனில் வாயாடி வெல்லும்
சட்ட மதில் ஓட்டையெனில் எதிர்ப்பைக் காட்டும்
வித்த மதில் பிரம்மமெனில் ஆனந்தம் ஊட்டும்

உண்டென்றால் இல்லையென்பாய்
 உறவென்றால் பகை என்பாய்
உருட்டிவிட்ட பந்ததனை உடனிருந்து தற்காத்து
 தற்பேணி சமரசத் தீர்வு காணும் சம்போகம் நீ!

## 6. அபிராமி அந்தாதியில் அவிட்டம் சக்தி

**நன்னடத்தை உண்டாக**

அணங்கே! அணங்குகள் நின் பரிவாரங்கள் ஆகையினால்

வணங்கேன்; ஒருவரை வாழ்த்துகிலேன்; நெஞ்சில் வஞ்சகரோடு

இணங்கேன் எனது உனது என்றிருப்பார் சிலர் யாவரொடும்

பிணங்கேன்; அறிவொன்றிலேன் எண்கண் நீவைத்த பேரளியே.

**மன ஒருமைப்பாடு அடைய**

அளியார் கமலத்தில் ஆரணங்கே! அகிலாண்டமும் நின்

ஒளியாக நின்ற ஒளிர்திருமேனியை உள்ளுதொறும்

களியாகி, அந்தக்கரணங்கள் விம்மி, கரைபுரண்டு,

வெளியாய்விடின், எங்ஙனே மறப்பேன் நின்விரகினையேன்.

**ஏவலர் பலர் உண்டாக**

விரவும் புதுமலர் இட்டு நின்பாத விரைக்கமலம்

இரவும் பகலும் இறைஞ்ச வல்லார், இமையோர் எவரும்

பரவும் பதமும், அயிராவதமும், பகீரதீயும்

உரவும் குலிசமும், கற்பகக் காவும் உடையவரே.

**சங்கடங்கள் தீர**

உடையாளை, ஒல்கு செம்பட்டு உடையாளை; ஒளிர்மதிசெஞ்

சடையாளை வஞ்சகர் நெஞ்சடையாளை, தயங்குநுண்ணூல்

இடையாளை, எங்கள்பெம்மான் இடையாளை, இங்கு என்னைஇனிப்

படையாளை, உங்களையும் படையாவண்ணம் பார்த்திருமே.

**Video Link : https://youtu.be/iVb8ulEiZMg**

## 7. விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் அவிட்டம் சக்தி ஓம்... ஓம்... ஓம்...

ஓம் ஸஹஸ்ரார்ச்சிஷே நம – ஆயிரம் கிரணங்களே போற்றி

ஓம் ஸப்தஜிஹ்வாய நம – ஏழு அக்னி ஆசி வார்ப்பே போற்றி

ஓம் ஸப்தைதஸே நம – ஏழு ஆதி ஜோதி கர்த்தாக்களே போற்றி

ஓம் ஸப்தவாஹநாய நம – ஆதவனின் ஏழு வண்ண குதிரை சக்தியே போற்றி

ஓம் அமூர்த்தயே நம – பாவமும், கவலையும் இல்லாதவனே போற்றி

ஓம் அநகாய நம – சிந்தனைக் குழப்பதற்கு அப்பாற் பட்டவனே போற்றி

ஓம் அசிந்த்யாய நம – தெளிவான நீரோட்டமே போற்றி

ஓம் பயக்ருதே நம – கெட்ட எண்ணங்களின் வெட்டிடும் வீரவாளே போற்றி

ஓம் பயநாஸநாய நம – நல்ல உள்ளங்களில் பயம் நீக்கும் புன்னகையே போற்றி

ஓம் அணவே நம – அடக்கத்தில் அமரருளே போற்றி

ஓம் ப்ரஹதே நம – பிரம்மாண்ட வலிமையே போற்றி

ஓம் க்ருஸாய நம – வசுக்களின் வாழ்த்தே போற்றி

ஓம் ஸ்தூலாய நம – ஸ்தூல சரீர படைப்பே போற்றி

ஓம் குணப்ருதே நம – முக்குணங்களின் வாத பிரதிவாதமே போற்றி

ஓம் நிர்க்குணாய நம – நிர்குணம் தரும் நிர்மலமே போற்றி

ஓம் மஹதே நம – மகா கட்டுரைக் கனலே போற்றி

ஓம் அத்ருதாய நம – துணையான பிரம்ம வித்தையே போற்றி

ஓம் ஸ்வத்ருதாய நம – சுயமான சுதந்திரமே போற்றி

ஓம் ஸ்வாஸ்யாய நம – செஞ்சொல் செந்தாமரை முகமே போற்றி

ஓம் ப்ராக்வம்ஸாய நம – வாய்வார்த்தை ஜாலத்தின் நகைச்சுவையே போற்றி

ஓம் வம்ஸவர்த்தநாய நம – உலகியலை வென்ற வழக்கறிஞரே போற்றி

ஓம் பாரப்ருதே நம – பாரம் சுமக்கும் சுமை தாங்கியே போற்றி

ஓம் கதிதாய நம – வேதங்களின் ஒலி பெருக்கியே போற்றி

ஓம் யோகிநே நம – நடமாடும் சமாதி யோகி நடனமே போற்றி

ஓம் யோகீஸாய நம – தடைக்கல்லை படிக்கல்லாக்கிய மோகியே போற்றி

ஓம் ஸர்வகாமதாய நம – ஆசைகள் ஆட்சி செய்யும் காமாட்சியே போற்றி

ஓம் ஆஸ்ரமாய நம – சரணாலயமே சம்சார சக்கரத்தில் செயல் ஸ்தானமே போற்றி

ஓம் ஸ்ரமணாய நம – நந்திகளையும், தத்துவமறியச் செய்யும் தாரகையே போற்றி

ஓம் கூஷமாய நம – சமச்சீர் நிலையளிக்கும் செங்கோலே போற்றி

ஓம் ஸுபர்ணாய நம – கற்பக விருட்சத்தில் ஞானம் தரும் பத்திரங்களே போற்றி

ஓம் வாயுவாஹநாய நம – வாயுவாகவே மாறிய வாசியோகியே போற்றி

ஓம் தநுர்த்தராய நம – வில்வித்தை வீர வேட்கை பிரியனே போற்றி

ஓம் தண்டாய நம – கோதண்டராமனைப்போல் கோகழி பெருமையே போற்றி

ஓம் தமியித்ரே நம – கட்டுப்பாடுகளின் அரசனே போற்றி

ஓம் தமாய நம – தர்மத்தில் பந்த பாச மற்றவனே போற்றி

ஓம் அபராஜிதாய நம – தோல்வி அறியாதவனே போற்றி

ஓம் ஸர்வஸஹாய நம – கர்மவீரன் கர்ம நிபுணனே போற்றி

ஓம் அநியந்த்ரே நம – வெற்றி இலக்கின் சரியான நிர்வாகமே போற்றி

ஓம் அநியமாய நம – பலன் தரும் பந்தயமே போற்றி

ஓம் யமாய நம – யமனைக்கூட அஞ்சாத மரணமில்லா மன்னவனே போற்றி

## 8.லலிதா ஸஹஸ்ரநாமத்தில் அவிட்டம் சக்தி

பாஷாரூபாப்ரஹத்ஹேநாபாவாபாவ விவர்ஜிதா
ஸ்<sup>6</sup>காராத்யா சுபகரீ சோபநா ஸ்<sup>6</sup>லபாகதி

ராஜராஜேச்வரீ ராஜ்யதாயினீ ராஜ்யவல்லபா
ராஜத்க்ருபாராஜபீட நிவேசித நிஜாச்ரிதா

ராஜ்யலக்ஷ்மீகோசநாதாசதுரங்கபலேச்வரீ
ஸாம்ராஜ்யதாயினீ ஸத்யஸந்தா ஸாகரமேகலா

தீக்ஷிதா தைத்யசமனீ ஸர்வலோகவசங்கரி
ஸர்வார்த்ததாத்ரீஸாவித்ரீ ஸச்சிதானந்த ரூபிணீ

தேசகாலாபரிச்சின்னா ஸர்வகா ஸர்வமோஹனீ
ஸரஸ்வதீ சாஸ்த்ரமயீகுஹாம்பா குஹ்யரூபிணீ

ஸர்வோபாதிர் விநிர்முக்தா ஸதாசிவபதிவ்ரதா
ஸம்ப்ரதாயேச்வரீ ஸாத்வீகுருமண்டல ரூபிணீ

**Video Link : https://youtu.be/DtSBLpQStT4**

## 9. கந்தகுரு கவசகத்தில் அவிட்டம் சக்தி

கவலையை விட்டு நீ ஸ்கந்தகுரு கவசமிதை

இருந்த படியிருந்து ஏத்திவிடு ஏத்தினால்

தெய்வங்கள் தேவர்கள் சித்தர்கள் பக்தர்கள்

போற்றிடுவர் ஏவலுமே புரிந்திடுவர் நிச்சயமாய்

ஸ்கந்தகுரு கவசம் ஸம்சயப் பேயோட்டும்

அக்ஞானமும் அகற்றி அருள் ஒளியும் காட்டும்

ஞான ஸ்கந்தகுரு நாதனென்று முன் நிற்பன்

உள்ளொளி யாயிருந்து உன்னிலவ னாகிடுவான்

**Video Link : https://youtu.be/fO7MD2St1iU**

## 10. கந்தர் அநுபூதி அவிட்டம் சக்தி

சாகாது, எனையே சரணங் களிலே

கா கா. நமனார் கலகம் செயும் நாள்

வாகா, முருகா, மயில் வாகனனே

யோகா, சிவ ஞான உபதேசிகனே.(41)

குறியைக் குறியாது குறித்து அறியும்

நெறியைத் தனிவேலை நிகழ்த்திடலும்

செறிவு அற்று, உலகோடு உரை சிந்தையும் அற்று

அறிவு அற்று, அறியாமையும் அற்றதுவே.(42)

**Video Link : https://youtu.be/x9sjGNdLHkw**

## 11. ராகங்களில் அவிட்டம் சக்தி

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| நீதிமதி | நீதிமதி | காந்தா மணி | ரிஷப பிரியா |

## 12. மூலமந்திரம்

ஓம் ஐம்க்லீம் ஸௌஹ்ரீ வத வத
வாக்வாதினி ஸ்வாஹா

## 13. விருட்ச சக்தி பெற நட வேண்டிய மரம்

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| வன்னி | கருவேல் | சீதாபழம் | ஜாதிக்காய் |

## 14. பரிகாரம்

- கருப்பு பாதரட்சைகள் ஏழைகளுக்கு கொடுக்கவும்.
- எறும்புகளுக்கு வெள்ளம் அளிக்கவும்.

- சிவன் கோயிலில் மைசூர்பருப்பு கொடுக்கவும்.
- குறைந்தபட்சம் 7 நபர்களுக்கு உதவிடுக.
- உங்கள் வழிபாட்டிற்கு ஏற்றபடி மந்திரங்களை பாராயணம் செய்யவும்.
- கோவிலுக்கு சென்று சுவாமியை தரிசிக்கவும்.
- 2x2 கண்ணாடி வைத்து உங்கள் முகத்தை பார்த்து தியானம் செய்யவும். (ஆடி தியானம்).
- நட்சத்திர கோயில் **அருள்மிகு பிரம்மஞானபுரீஸ்வரர் திருக்கோயில்,** கொருக்கை - கும்பகோணம்.


**Aathma Trust (ஆத்ம லிங்கம்)**
Regd No: 96/19
33.கோசாலை, கிரிவலம்,
திருவண்ணாமலை - 600 501.

**Website :** www.aathmanakshtra.org
www.yaasha.in
**Email :** jhohumm@gmail.com
**Youtube :** aathmanakshatra